செய்தி வெளியீடு எண்: 134 நாள்: 22.02.2018

## செய்தி வெளியீடு

இந்திய காவல்துறையில் உள்ள காவலர்களின் பணித்திறனை கண்டறிந்து ஊக்கபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் புதிய அறிவியல் முன்னேற்றங்களையும் நுணுக்கங்களையும் பயன்படுத்தி புலனாய்வு செய்வதற்கும், அகில இந்திய காவல் பணித்திறனாய்வுப் போட்டிகள் மத்திய நுண்ணறிவு பிரிவுடன் இணைந்து ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு மாநிலங்களில் நடத்தப்படுகிறது. இப்போட்டிகளில் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரேதேசங்கள் மற்றும் மத்திய காவல் படைகளை சேர்ந்த அணிகள் பங்கு பெறுகின்றன. பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் விருந்தோம்பலுக்கு புகழ்பெற்ற தமிழ்நாடு, இவ்வாண்டு பணித்திறனாய்வுப் போட்டியினை நடத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. அகில இந்திய காவல் துறையினரின் பணித்திறனாய்வுப் போட்டிகள் 24.02.2018 முதல் 28.02.2018 வரை சென்னையில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு 61வது அகில இந்திய காவல் பணித்திறனாய்வுப் போட்டிகள் தமிழ்நாட்டில் சென்னை வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் தொடங்க உள்ளது. இதுவரை 60 அகில இந்திய காவல் பணித்திறனாய்வு போட்டிகள் வெவ்வேறு மாநிலங்களில் நடைபெற்றுள்ளன. தமிழ்நாடு இப்போட்டிகளை 1954, 1974, 1991, 2000, 2006 ஆகிய ஆண்டுகளில் சிறப்பாக நடத்தியுள்ளது. 6வது முறையாக உவகையுடனும், விருந்தோம்பல் உணர்வுடனும் இப்போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பினை தமிழ்நாடு பெற்றுள்ளது.

இந்த ஆண்டு 61வது அகில இந்திய காவல் பணித்திறனாய்வு போட்டிகளில், 21 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்கள் மற்றும் 7 மத்திய காவல் படைகளை சார்ந்த அணிகளில், சுமார் 1500 போட்டியாளர்கள் பங்கு பெறுகின்றனர். இது தவிர, மோப்ப சக்தியால் வெடிமருந்துகள், போதை பொருட்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டறிவதற்கு, 123 மோப்ப நாய்கள் போட்டியில் பங்குபெற உள்ளன. மோப்ப நாய் போட்டிகளில் குற்றங்களைக் கண்டறிவதற்கு உதவுவதோடு, ஆணைகளுக்கு கட்டுப்படும் திறன் மற்றும் உடல் திறன் ஆகியவை சோதனை செய்யப்படும்.

காவல்துறை திறனாய்வு போட்டி கீழ்கண்ட 6 தலைப்புகளில் நடைபெறுகிறது.

(1) அறிவியல் சார்ந்த புலனாய்வு திறன் போட்டிகள்

அ) சட்டம்
ஆ) தடய அறிவியல்
இ) சட்டம் சார்ந்த மருத்துவம்
ஈ) தடய பொருட்களை கையாளும் திறன்
உ) கைரேகைகளை கண்டுபிடித்தல் மற்றும் கையாளுதல்
ஊ) குற்ற நிகழ்விடத்தை கவனித்து காட்சி படுத்துதல்
எ) காவல்சித்திர பிரதமை

(2) கணினி திறன் போட்டிகள்

அ) கணினி கோட்பாடு
ஆ) M.S. office திறன்
இ) V.B.Net

(3) நாசவேலை தடுப்பு திறன் போட்டிகள்

அ) வாகனச் சோதனை
ஆ) அறை சோதனை
இ) புல்வெளி சோதனை

ஈ) அதி முக்கிய நபர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது தொடர்பான பயிற்சி

(4) புகைப்படத் திறன் போட்டிகள்

(5) ஒலி/ஒளி படத் திறன் போட்டிகள்

(6) மோப்ப நாய்கள் திறன் (ஆணைக்கு கட்டுப்படுதல் மற்றும் உடல் திறன்)

அ) போதை பொருட்கள்
ஆ) வெடி பொருட்கள்
இ) குற்றவாளிகளை கண்டுபிடித்தல்

மொத்தம் 20 வகையான பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. மேற்கண்ட திறனாய்வு போட்டிகள், மத்திய புலனாய்வு பயிற்சி பள்ளி மற்றும் நாட்டின் புகழ்பெற்ற பிற அமைப்புகளிலிருந்து வந்துள்ள நடுவர்கள் மூலம் நடத்தப்பெறும்.

அகில இந்திய காவல் பணித்திறனாய்வுப் போட்டிகளில், அறிவியல் சார்ந்த புலனாய்வு, நிபுணத்துவ புகைப்படம், வீடியோ படம், நாசவேலை தடுப்பு ஆகியவை சென்னை வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெறுகிறது. மேற்படி பரந்த

பயிற்சியகத்திலேயே போட்டியாளர்களுக்கான உறைவிடம் உள்ளிட்ட வசதிகள் சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கணினி விழிப்புணர்வு குறித்த தேர்வானது, கிண்டியில் உள்ள அண்ணா பல்கலை கழகத்தில் அமைந்துள்ள இராமனுஜம் கணினி மையத்தில் நடைபெறுகிறது. ஆவடி ரெஜிமெண்டல் மையம் மற்றும் வீராபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 3வது அணி தளத்தில் மோப்ப நாய்களின் திறன் போட்டிகள் நடைபெற உள்ளன.

சென்னை வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களால், 24.02.2018–ம் தேதியன்று, மேற்படி 61வது ஆண்டு அகில இந்திய காவல் பணித்திறனாய்வுப் போட்டிகள் துவக்கி வைக்கப்படவுள்ளது.

சென்னை வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் 28.02.2018–ம் தேதியன்று நிறைவு விழா நடைபெற உள்ளது. மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் வெற்றியாளர்களுக்கு பாராட்டும், பதக்கங்களும், பரிசுகளும் வழங்க உள்ளார்கள்.

காவல்துறை தலைமை இயக்குநர், மற்றும் ஏனைய அதிகாரிகளின் சீரிய ஏற்பாடுகளில் அனைத்து போட்டியாளர்கள், நடுவர்கள், அணி நிர்வாகிகள் தங்குவதற்கும் போட்டிகள் சிறப்பாக நடைபெறவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**